புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தமிழ் இலக்கியங்களில் அறக்கோட்பாடுகள்

இரா. சங்கீதா,
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
கே.எம்.ஜி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
குடியாத்தம்.

## முன்னுரை :

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. (இல்வாழ்க்கை குறள் - 45)

எனும் குறளுக்கு இலக்கணமாய் தமிழ் இலக்கியங்கள் இல்லற வாழ்க்கை முதல் அரசியல் வாழ்வு வரை அறத்தை வலியுறுத்துகின்றன. சங்க இலக்கியம், காப்பிய இலக்கியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், தனிப்பாடல்கள், உரைநூல்கள், தத்துவங்கள், உரைநடைகள், புதுக்கவிதைகள் என காலந்தோறும் தமிழ் இலக்கியங்கள் தன்னை பழமைக்கு பழமையாய் புதுமைக்கு புதுமையாய் தன்னை வளம்படுத்திக் கொண்டிருக்கின்றது. தமிழ் இலக்கியங்களில் பொதிந்திருக்கும் அறக்கோட்பாடுகளை வெளிக்கொணர்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## அறம் - சொல் - பொருள் - விளக்கம் :

அறம் என்னும் சொல் அறு என்னும் சொல்லின் திரிபு ஆகும். மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் தொகுதியே – முழுநிறை வடிவமே அறம் என்று கூறுவர். 'பிறவிதோறும் மனிதனைப் பற்றிக் கொண்டு வரும் தீவினையை அறுத்தெறிவதே அறம் என்ற ஆன்மிக விளக்கமும் இதற்குத் தரப்படுவதுண்டு

தமிழ் இலக்கியங்கள் அறம்,பொருள்,இன்பம்,வீடு என்ற நாற்பொருளில் நான்கையோ, மூன்றையோ,இரண்டையோ,ஒன்றையோ கொண்டு தமிழில் இலக்கியங்கள் இயற்றப்பட வேண்டும் என்ற மரபை தமிழ் நூல்கள் கொண்டுள்ளன. பொருள்,இன்பம்,வீடு ஆகியவை இல்லாத தமிழ்ப் படைப்புகள் இருக்கலாம் ஆனால் அறமின்றி எவ்விலக்கியமும் தமிழ் பரப்பில் இல்லை எனவே தமிழ் இலக்கியங்கள் அறத்தின்பால் பட்டவை என்பதில் தின்னமும் ஐயமில்லை.

## தமிழிலக்கியமும் அறமும் :

தமிழ் இலக்கியங்களில் அறக்கோட்பாடுகள் நிறையவே இருக்கின்றன. நீதிநூல்கள், வள்ளுவர்காலம் முதல் மாயூரம் வேதநாயகம் பிள்ளை காலம் வரை அன்றையத் தமிழ்ச் சமுதாயத்தின் அறவியல் கோட்பாடுகளை அளவிட முடியும். ஔவையாரின் படைப்புகள் அனைத்தும் அறத்தையே போதிக்கின்றன. மூதுரை,நல்வழி,கொன்றைவேந்தன் போன்ற நூல்கள் அறத்தையே வலியுறுத்துகின்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பதினோறு நூல்கள் அறத்தையே மக்களுக்கு புகட்டுகின்றன. வேதநாயகரின் 'பிரதாபமுதலியார்சரித்திரம்' பெண்ணின் பெருமையைப் பேசுகிறது என்பது மட்டுமல்லாமல், ஒரு சிறந்த ஆண்,பெண்,குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்ற மரபு வழியிலான தமிழ் சமுதாயத்தின் அறவழிகோட்பாட்டில் நின்று விளக்கமாகப் பேசுகின்றது.

பாரதியின் அறக்கோட்பாடு :

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' பல அணுகுமுறைகளுக்கு உட்பட்டது. அறநெறிக்கோட்டுடன் இதனை நோக்கலாம்,

'தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்
தருமம் மறுபடி வெல்லும் எனுமியற்கை
மருமத்தை நம்மாலே யுலகங் கற்கும்.'

வீமனின் கூற்றாகப் பாரதி கூறும் இக்கூற்று இக்காவியத்தின் அறநீதி, இதைப்போலவே தருமன், வீமன்,சகுனி,துச்சாதனன்,கர்ணன்,விதுரன், முதலிய கதை மாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர். கதைமாந்தர்கூற்றாகவும்,இடைபுகுந்து பேசும் ஆசிரியர்கூற்றாகவும், இயற்கை வருணனையோடு நிகழ்ச்சிகளின் ஊடாகவும் பாரதியின் இந்த அறநெறிக்கோட்பாடுகள் அழுத்தமாகவும், உணர்ச்சி வடிவமாகவும் பளிச்சிடும்படி தெரியவருகின்றன.

இந்த தருமம், வியாசர்கூறும் வருணாசிரமத்தை ஒட்டிய தருமம் அல்ல பாஞ்சாலி சபதத்திலுள்ள அறநெறிகள் எல்லாம் 'தேசியம்' என்ற அறக்கோட்பாட்டை ஒட்டியே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

சங்ககால அறக்கோட்பாடு :

அறக்கோட்பாடானது ஆழ்பொருளாகவும்,நிறைபொருளாகவும் உடையதாகி விரிவுபட்டு நிற்கும் தன்மை கண்டுணரப்பட்டது. அறத்தின் பொருளை எல்லைக்குள் நின்று வரையறுக்கும்போது கோட்பாடுகளாக உருவாக்கம் பெறுகின்றன. தொல்காப்பியத்தில் 'அறத்தொடு நிற்றல்' சிறப்பாக எடுத்தாளப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மன்னராட்சி முறை இருந்தது மன்னன் வழித்தே மலர்தலை உலகமும் சென்றது எனவே மன்னன் தான் செய்ய நினைக்கும் செயல்களை எல்லாம் செய்தி;டலாம் என்ற தன்னிச்சையும் இருந்தது. மன்னன் தன் சொந்த விருப்பு,வெறுப்புகளுக்கு ஆளாகாமல் நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்பதை அறத்தின் வாயிலாக அரசனுக்கு அறிவுறுத்தப்பட்டது.

அறத்தின் பக்கம் அரசன் செயல்பட வேண்டும் என்பதை புலவர்கள் மூலம் நடந்தது என்பதை மதுரை மருதன் இளநாகனார்பாண்டியன் இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன் குறித்து பாடும்போது,

கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்நேரிடும்
நெஞ்சுடைய புகல்மறவரும் என
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்;
அதனால்,நமரெனக் கோல்கோ டாது,
பிறர்எனக் குணங் கொல்லாது,
ஞாயிற் றன்ன வெந்திரல் ஆண்மையும்
திங்கள் அன்ன தண்பெருஞ் சாயலும்,
வானத்து அன்ன வண்மையும் மூன்றும்
உடையை ஆகி இல்லோர்கையற
நீடு வாழிய நெடுந்தகை (புறநானூறு பாடல் எண் : 55)

என்று பாடுகிறார். அரசின் கொற்றத்திற்கு அடிப்படைக் காரணமே அறநெறி என்பதை இச்சங்கப்பாடல் காட்டும் அறக்கோட்பாடாகும். மன்னன் யானை,குதிரை,தேர்,காலாட்படை என்று பல படைகளை வைத்திருந்தாலும் அரசியல் நடத்தும் நிலையில் அறநெறியை கடைப்பிடிக்க வேண்டும், நீதி தவறாது நடுநிலையோடு செயல்பட வேண்டும் என்பதை அரசியலுக்கு 'அறமே' அடிப்படை என்ற கருத்தினை பெறமுடிகிறது.

ஐம்பெருங்காப்பியங்களில் அறக்கோட்பாடுகள் :

ஐம்பெருங்காப்பியங்களை இயற்றிய ஆசிரியர்கள் அவரவர்சார்ந்த சமயம்,மதம் குறித்த அறக்கோட்பாடுகளை தங்கள் காப்பியங்களில் இடம்பெறச் செய்து மக்களை நல்வழிப்படுத்தினர். சிலப்பதிகாரத்தின் வாயிலாக மன்னன் நடுநிலையோடு எதையும் ஆராய்ந்து

*அறிந்து செயல்பட வேண்டும் என்பதையும், சிலம்பின் தொடர்ச்சியாக மணிமேகலை உள்ளதால் இவ்விரண்டும் ஒரே குடும்பத்தின் கதையையும், பௌத்தமத அறக்கோட்பாடுகளையும் வலியுறுத்துகின்றன.*

*சமண காப்பியமான சீவக சிந்தாமணியில் சமண சமய அறக்கோட்பாடுகள் வலியுறுத்தப்படுகின்றன. வளையாபதியின் காப்பிய நோக்கம்,சாதி ஒழிப்பு,பெண்மையை போற்றுதல்,அறம்,புலால் மறுத்தல்,கொல்லாமை,நிலையாமை முதலியவற்றை வலியுறுத்துவதாகும். குண்டலகேசி பௌத்த மதத்தை சார்ந்த காப்பியம் அச்சமயத்திற்கு பெரும் பகையாக இருந்த சமண சமய கொள்கைகளைக் கண்டிக்கும் சொற்போர்நூலாகவுள்ளது. பெண்மையைப் போற்றுதல்,களவின்மை,தீயொழுக்கம் நீக்குதல், (சூது) துறவு ஆகிய நான்கு விதமான நோக்கங்களை குண்டல்கேசி கொண்டுள்ளது.*

*கற்பு, அன்பு, அருள், மக்கள்நலன், பசிப்பிணி நீக்குதல், மனிதநேயம், கள்ளாமை,கொல்லாமை,வாய்மை,விரதம்,காத்தல்,விருந்தோம்பல்,ஒருமைப்பாடு,கல்வி,தருதல், குளம் வெட்டுதல், கோவில் மேம்பாடு, குடிமக்கள் காத்தல், ஒழுக்கம், போர்நெறி, கல்வி முதலிய அறக்கோட்பாடுகளையே ஐம்பெருங்காப்பியங்கள் வலியுறுத்துகின்றன.*

*நீதி நூல்கள் கால அறக்கோட்பாடு:*

*சங்க இலக்கியம்,காப்பிய இலக்கியத்திற்கு அடுத்த படியாக நீதி நூல்கள் பதினொன்றும் அறத்தை பெரிதும் வலியுறுத்தின என்பதை,*

*வழிப்படரல் வாயல் வருந்தாமை வாய்மை*
*குறிப்படரல் தீக்சொற் களோடு –மொழிப்பட்ட*
*காய்ந்து விடுதல் களைந்துயக் கற்றவர்*
*ஆய்ந்து விடுதல் அறம்.          (சிறுபஞ்சமூலம் பாடல் எண் : 97)*

*என்று சிறுபஞ்சமூலம் அறத்தை பற்றிக் குறிப்பிடுகிறது. தீச்சொற்களைச் சொல்லாமல் இருத்தல்,பிறர்பொருளை திருடாமல் இருத்தல்,உண்தை தவறாமல் இருத்தல்,அறிவுரைகளைக் கேட்டு அவற்றைக் கடக்காமல் இருத்தல், ஆகிய ஐந்தினையும் செய்யாமல் இருத்தலே அறம் என்கிறார்காரியாசான்.*

*திருக்குறளில் அறக்கோட்பாடுகள் :*

*திருக்குறள் அறத்தினை வரையறை செய்து அதன் இயல்புகளை அறன்வலியுறுத்தல் என்ற அதிகாரத்தின் மூலம் உலக மக்கள் அனைவரும் சாதி,இனம்,மதம் கடந்து குறளின் அடிநாதமே அறம் என்பதை தெளிவாக்கிவிடுகின்றது.*

*சிறப்புஈனும் செல்வமும் ஈனும் அறத்தின்ஊஉங்கு*
*ஆக்கம் எவனோ உயிர்க்கு.          (அறன் வலியுறுத்தல் குறள்-31)*

*மறுமையில் வீடுபேற்றையும், இம்மையில் செல்வத்தையும் அறம் தரவல்லது,ஆதலால் அறத்தினை விட உயிர்க்கு ஆக்கம் தரவல்லது வேறு எதுவும் இல்லை என்கிறார். மேலும்,;*

*மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்*
*ஆகுல நீர பிற.          (அறன் வலியுறுத்தல் குறள் - 34)*

*ஒருவன் தன் மனத்தின்கண் குற்றம் இல்லாதவனாக இருத்தல் வேண்டும் அதுவே அறம் மனத்தூய்மை இன்றி செய்யப்படும் பிற அனைத்துமே ஆரவாரத் தன்மையுடையன அறத்தான் வருவதே இன்பமும்,செல்வமும் தரவல்லது. இல்லறம்,துறவறம் இரண்டிற்கும் ஆதாரமே அறம் என்பதை ஆணித்தரமாக பகுத்துக் கூறப்பட்டுள்ளது.*

*முடிவுரை :*

*உயிர்இன்றி உடம்பு எவ்வாறு இயக்கம் பெறாதோ அதைப்போல் தமிழ் இலக்கியங்களில் அறக்கோட்பாடுகள் இன்றி அவனி நிலைபெறாது என்பதை உணர்ந்தே நம்முன்னோர்கள் அறக்கோட்பாடுகளை ஆங்காங்கு வகுத்தும்,தொகுத்தும் அளித்துள்ளனர், என்பதை இக்கட்டுரை எடுத்தியம்பியுள்ளது.*

*சான்றாதாரங்கள் :*

1. வித்துவான். இரா. கன்னியப்ப நாயக்கர், மூன்றாம் பதிப்பு –செப்-2006, திருக்குறள், வானதி பதிப்பகம் - சென்னை – 17
2. புலவர். அ. மாணிக்கனார், இரண்டாம் பதிப்பு – 2001, புறநானூறு (முதல்தொகுதி), வர்த்தமானன் பதிப்பகம் - சென்னை – 17
3. பேரா. மு. சண்முகம் பிள்ளை, மறுபதிப்பு – 2007,பதினெண் கீழ்க்கணக்கு (தொகுதி -3) முல்லை நிலையம், சென்னை - 17

********* ********* ********** ********* ********* ********** ********** **********